கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
சுற்றாடல் அமைச்சு
பதவி வெற்றிடங்கள்

2008 இலக்கம் 35 உடைய கடல் மாசடைதல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் நிரந்தர ஊழியர் குழாத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

தொழில் விபரங்கள்:

2008 இலக்கம் 35 உடைய கடல் மாசடைதல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றல்.

01. உதவி/ பிரதி முகாமையாளர் (மாகாண) (MM 1-1) – 01 பதவி

மாகாண வெற்றிடம் நிலவும் இடம் (தெற்கு)

தகைமைகள் :

வெளி விண்ணப்பதாரர்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றாடல் விஞ்ஞானம்/ கடற்றொழில் மற்றும் கடல் விஞ்ஞானம்/ கடல் வள முகாமைத்துவம்/ கடற்கரை மற்றும் சமுத்திர வள முகாமைத்துவம்/ சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்/ விஞ்ஞான விஞ்ஞானம்/ பிரயோக விஞ்ஞானம்/ உயிரியல்/ விலங்கியல் மற்றும் கடற்றொழில் விவகாரங்கள்/ உயிரியல் தொழில்நுட்பம்/ நீரியல் வளத் தொழில்நுட்பம்/ இரசாயனவியல்/ பௌதிகவியல் ஆகிய பாடத்துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டம் பெற்றுக்கொண்ட பின்னர் பதவியுடன் தொடர்பான பாடத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருத்தல்

உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)

1 மேற்குறிப்பிட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

2. "கனிஷ்ட முகாமைத்துவ" (JM) சேவை வகுப்பில் குறித்த துறையில் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட வெற்றிகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

வயது:

22 வயதிற்குக் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை பொருந்தாது.

சம்பள அளவு:

(2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூப இலக்கம் 01/2025 இன் பிரகாரம்)

MM 1-1 – 2025 – (ரூ.91,690-10x2,480-15x3,450-168,240/=)

02. செயலாளர் (MA 2-2)- 01 பதவி

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - கொழும்பு

தகைமைகள்:

வெளி விண்ணப்பதாரர்கள்

செயலாளர் பதவியில் ஒப்படைக்கப்படும் கடமையுடன் தொடர்பாக மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் விரியோகிக்கப்பட்ட தேசிய தொழிசார் தகைமை (NVQ) இந்தாம் (05ஆம் மட்டத்திற்குக் குறையாத மட்டமொன்றில் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்

பதவிக்கு பொருத்தமான ஏனைய தகைமைகள்

கணினி சொல்லாக்கம்/ தட்டச்சு தொடர்பாக மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறியொன்றை தொடர்ந்திருத்தல்

உள்ளக விண்ணப்பதாரர்கள்

மேற்படி வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பொருந்தும்.

வயது:

18 வயதிற்குக் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை பொருந்தாது.

சம்பள அளவு:

(2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூப இலக்கம் 01/2025 இன் பிரகாரம்)

MA 2-2 – 2025 – (ரூ.50,540-10x540-7x630-4x1,080-20x1,280-90,270/=)

03. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத) (MA 1-2)– 04 பதவிகள்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - கொழும்பு, கம்பஹா

தகைமைகள்:

வெளி விண்ணப்பதாரர்கள்

கல்வி

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்கம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியுடனும் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்

(அ) ஆரம்பத் தரம் - திறனற்ற, அரைத்திறன் மற்றும் திறன் சேவை வகுப்புக்களில் கீழுள்ள "ஆ", "இ" மற்றும் "உ" இல் குறிப்பிடப்பட்ட தகைமையுள்ள ஊழியர்களுக்கு இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதரண தரம்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியுடனும் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் வகிக்க வேண்டுமென்பதுடன், அந்த நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்

(உ) குறித்த திகதிக்கு கிட்டிய நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வேறு தகைமைகள்

மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 06 மாதங்களுக்குக் குறையாத கணினி தொடர்பான சான்றிதழ் பத்திரக் கற்கை நெறியொன்றை தொடர்ந்திருத்தல் அல்லது அதற்கு சமமான வேறு தகைமைகளைப் பெற்றிருத்தல்

வயது:

18 வயதிற்குக் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை பொருந்தாது.

சம்பள அளவு:

(2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூப இலக்கம் 01/2025 இன் பிரகாரம்)

MA 1-2 – 2025 – (ரூ.46,220-10x540-7x630-12x1,080-12x1,280-84,350/=)

04. சாரதி (PL 3) – 02 பதவிகள்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - கொழும்பு

தகைமைகள்:

வெளி விண்ணப்பதாரர்கள்

கல்வி

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

தேர்ச்சி

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட கனரக வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் வாகனம் செலுத்துவது தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருத்தல்

உள்ளக விண்ணப்பதாரர்கள்

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட கனரக வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் வாகனம் செலுத்துவது தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருத்தல்

மற்றும்

ஆரம்ப அரைத் திறன் (PL 2) அல்லது ஆரம்ப திறனற்ற (PL 1) சேவை வகுப்பொன்றில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

வயது:

18 வயதிற்குக் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை பொருந்தாது.

சம்பள அளவு:

(2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூப இலக்கம் 01/2025 இன் பிரகாரம்)

PL 3 – 2025 – (ரூ.43,280-10x490-10x540-10x590-12x630-67,040/=)

05. கடல் மாசடைதலைத் தடுக்கும் வெளிக்கள உதவியாளர்(PL 2)– 04 பதவிகள்

வெற்றிடம் நிலவும் மாவட்டம் - திருகோணமலை, யாழ்ப்பாணம், கம்பஹா

தகைமைகள்:

வெளி விண்ணப்பதாரர்கள்

சிங்களம்/ தமிழ் மொழி உட்பட 03 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

பதவியுடன் தொடர்பாக மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் விரியோகிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை (NVQ) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத மட்டமொன்றில் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)

1. சிங்களம்/ தமிழ் மொழி உட்பட 03 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல்

2. குறித்த துறையில் ஐந்து (05) வருட அனுபவம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியினால்/ தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் குறித்த பதவியில் ஒப்படைக்கப்படும் கடமைக்கு அமைவாக, தொழில்சார் பரீட்சையின் (Trade Test) போது உறுதிப்படுத்தப்படுகின்ற தேசிய தொழில்சார் தகைமை (NVQ) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத மட்டமொன்றில் தேர்ச்சியுடன் ஆரம்ப திறனற்ற (PL 1) சேவை வகுப்பிலான ஊழியர்கள்.

3. பதவியுடன் தொடர்பாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் விரியோகிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை (NVQ) இரண்டாவது (02) மட்டத்திற்குக் குறையாத மட்டமொன்றில் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மேலதிக தகைமைகள்

1. முத்துக் குளித்தல்/ படகு மற்றும் தோணி செலுத்தக்கூடிய ஆற்றல்

2. நீந்தக்கூடிய ஆற்றல் காணப்பட வேண்டும்.

வயது:

18 வயதிற்குக் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை பொருந்தாது.

சம்பள அளவு:

(2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவை சுற்றுநிரூப இலக்கம் 01/2025 இன் பிரகாரம்)

PL 2 – 2025 – (ரூ.42,300-10x490-10x540-10x590-12x630-66,060/=)

பொதுவானவை:

01. சகல விண்ணப்பதாரர்களும்,

i. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நல்லொழுக்கம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

02. தகைமை பெறும் தினம்:

சேவைக்கு/ பதவிக்கு நியமிப்பதற்காக விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி யெய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் மேற்படி பதவிகளுக்கு தேவையான தகைமைகளை விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமாகும்.

03. நியமனத்தின் தன்மை:

பதவி நிரந்தரமானதாகும். ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஊழியரினால் செலுத்தப்படும் 10% இற்கு மேலதிகமாக அதிகார சபையினால் 15% பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% மேலதிக பங்களிப்பு வழங்கப்படும்.

04. விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல்:

i. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தினால் (https://mepa.gov.lk) தரவிறக்கம் செய்யப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் ஊடாக மாத்திரம் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ii. பல பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் விண்ணப்பப்படிவங்களை வேறுவேறாக சமர்ப்பிக்க வேண்டும்.

iii. அண்மையில் பெற்றுக்கொண்ட 02 நன்னடத்தை சான்றிதழ்கள், கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், பொலிஸ் அறிக்கை, தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், ஏனைய தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளை இணைத்து முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்படிவங்களை **2026.11.26** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு தலைவர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, **இல. 177, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05 இற்கு** பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இடும் உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் மேலே புகைப்படப் பிரதிகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

iv. அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் சபைகளில் சேவையில் ஈடுபடுகின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பப்படிவங்களை தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

v. சகல விதத்திலும் முழுமையற்ற, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, குறித்த சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகள் இணைக்கப்படாத மற்றும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக எமது அதிகார சபை பொறுப்பு கூறாது.

தலைவர்,
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை,
இல.177,
நாவல வீதி, நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05
2026.11.13